# 3

# அல்லாஹ் படைப்பாளன்

மனிதர்களாகிய எங்களைப் படைத்தவன் யார்? நாம் வாழும் இந்த உலகைப் படைத்தவன் யார்? பூமியிலுள்ள கடல்களை, நதிகளை, காடுகளை, மலைகளைப் படைத்தவன் யார்? மிருகங்கள், பறவைகள், மீன்கள், பூச்சிகள் போன்றவற்றைப் படைத்தவன் யார்? இந்த வினாக்கள் முக்கியமானவை. மனிதர்கள் எல்லோரின் உள்ளங்களிலும் இந்த வினாக்கள் தோன்றும். இது ஓர் அடிப்படையான வினாவாகும். இதற்கான சரியான விடையை நாம் அறிய வேண்டும்.

நாம் கற்கும் வகுப்பறை, அதிலுள்ள கதிரைகள், மேசைகள், கற்பித்தல் உபகரணங்கள் என்பன தாமாகவே இங்கு தோன்றினவா? நிச்சயமாக இந்தப்





பாடசாலையையும் அதன் வகுப்பறைகளையும் மேசன் கட்டியிருக்க வேண்டும். இங்குள்ள தளபாடங்களைத் தச்சன் செய்திருக்க வேண்டும். நூல்களை எழுத்தாளர்கள் எழுதி பதிப்பித்திருக்க வேண்டும். இப்படி இல்லாமல் இவை சுயமாக உருவாகி இருக்க முடியுமா? நிச்சயமாக முடியாதல்லவா?

பாண் தயாரிக்கும் ஒரு வெதுப்பகத்தை (பேக்கரி) எடுத்துக் கொள்வோம். அங்கு, கோதுமை சுயமாக மா மூடைகளாக மாறுகின்றது. அந்த மா மூடைகள் இயந்திரங்களில் தானாகவே போய் விழுகின்றன. இயந்திரங்கள் சுயமாக இயங்குகின்றன. பாண்கள் தானாகவே உருவாகி கீழே விழுகின்றன என்று யாரும் கூறினால் நீங்கள் நம்புவீர்களா?

இதேபோன்று உங்கள் வீட்டு சமையலறையில் தேநீர், சோறு, கறி போன்றன தானாகவே தயாராகின்றனவா? அல்லது அறிவும் ஆற்றலும் உள்ள உங்கள் தாயார்தான் அவற்றைத் தயாரித்து உங்களுக்கு வழங்குகின்றாரா? உங்கள் சாப்பாட்டு மேசையில் உணவுகள் தானமாகவே வந்து சேர்கின்றன என்று உங்கள் தாயார் சொன்னால் கூட நீங்கள் நம்புவீர்களா? இந்தப் பணிகளை படிமுறையாக இயக்கி வைக்க ஒருவர் இருக்க வேண்டுமல்லவா?

இவற்றிலிருந்து நாம் எதனை விளங்குகின்றோம்? எந்தவொரு படைப்பையும் உருவாக்கிய ஒரு படைப்பாளன் இருக்க வேண்டும். படைப் பாளன் இல்லாமல் எந்தவொரு படைப்பும் உருவாகாது. இவ்வாறான எந்தவொன்றையும் முதலில் இயக்கி வைக்கக் கூடிய ஒருவன் இருக்க வேண்டும்.

அந்த இயக்குபவன் அறிவுள்ளவனாக இருக்க வேண்டும். சக்தியும் ஆற்றலும் உள்ளவனாக இருக்க வேண்டும்.

இப்போது இந்த பாரிய உலகை நோக்குங்கள். அதில் பரந்து விரிந்துள்ள சமுத்திரங்களை நோக்குங்கள். உயர்ந்து கம்பீரமாகக் காட்சி தரும் மலைகளை உற்று நோக்குங்கள். வானத்தில் பஞ்சு போன்று மிதக்கும் மேகக்கூட்டங்களைப் பாருங்கள். காட்டில் உலாவும் யானை, சிங்கம், சிறுத்தைகளைப் பாருங்கள். காகம், கிளி, பருந்து என வானில் பறக்கும் பறவைகளைப் பாருங்கள். பூனை, நாய், பசு போன்ற தோட்டத்தில் சுற்றித் திரியும் செல்லப் பிராணிகளை நோக்குங்கள்.

இவை அனைத்தும் நிச்சயமாக அறிவும், ஆற்றலும் உள்ள ஒருவனால் தானே படைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தப் படைப்பாளனே அல்லாஹ்!

மனிதர்களாகிய எங்களையும் எங்கள் மூதாதையர்களையும் படைத்தவன் அல்லாஹ்தான். ஆரம்ப மனிதரான ஆதம் (அலை) அவர்களைப் படைத்தவனும் அல்லாஹ்தான். அவரின் விலா எலும்பிலிருந்து ஹவ்வா (அலை) அவர்களைப் படைத்தவனும் அல்லாஹ்தான். அவர்கள் இருவரிலிருந்தும் இன்று வரையும் இனிமேலும் மனித சந்ததிகளைப் படைப்பதும் அல்லாஹ்தான். மனிதனையும், ஏனைய எல்லாப் படைப்புகளையும் அல்லாஹ்தான் படைத்தான் என நாம் உறுதியாக நம்புவோம்!!!

**அல்லாஹு ஹாலிகுனா அல்லாஹு ராஸிகுனா**
**அல்லாஹு ஹாதீனா சுப்ஹான மௌலானா**
**அல்லாஹ் எம்மைப் படைத்தவன்**
**அல்லாஹ் எமக்கு உணவளிப்பவன்**
**அல்லாஹ் நேர்வழி காட்டுபவன்**
**தூய்மையான எசமானன்**

### செயற்பாடு

1. வானத்தில் பறந்து செல்லும் ஒரு சிட்டுக் குருவியை அவதானியுங்கள். அதற்கு அல்லாஹ் வழங்கியுள்ள அருள்களைப் பட்டியற்படுத்துங்கள்.
2. அல்லாஹ்வின் படைப்பான மனிதனுக்கும் அவன் நிழல் பெறும் ஆல மரத்துக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை அட்டவணைப்படுத்துங்கள்.